M

# அரையாண்டு பொதுத் தேர்வு - 2017

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## கணக்குப்பதிவியல்

*நேரம்: 2.30 மணி* *மதிப்பெண்கள்: 90*

MADURAI DISTRICT

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 20 x 1 = 20

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக விளங்கக்கூடிய ஆவணத்தினை அழைப்பது
   a) கணக்கு b) நடவடிக்கை c) சான்றுச்சீட்டு
2. 19ஆம் நூற்றாண்டில் தொழில் புரட்சி ஏற்படக் காரணம் ______.
   a) இயற்கைச் சீரழிவுகள் b) அதிக அளவிலான மக்கள் தொகைப் பெருக்கம் c) வேலையின்மை
3. ______ கொள்கையானது ஒரு கணக்காண்டில் பின்பற்றக்கூடிய முறையினை அடுத்து வரும் கணக்காண்டிலும் பின்பற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
   a) தொடர்ச்சி மரபு b) உண்மை உணர்த்தும் c) முன்னெச்சரிக்கை
4. கணக்கியலின் ஆதாரத் தூண்களாக விளங்குபவை
   a) அடிப்படை கருத்துக்கள் b) அடிப்படை அனுமானங்கள் c) திருத்தியமைக்கப்பட்ட கொள்கைகள்
5. அமெரிக்க அணுகுமுறை ______ அணுகுமுறை என்று அழைக்கப்படுகிறது.
   a) பிரிட்டிஷ் b) இத்தாலி c) கணக்கியல் சமன்பாடு
6. முதல் மற்றும் எடுப்பு கணக்கு இடம்பெறும் வகை
   a) ஆள்சார் க/கு b) சொத்து க/கு c) பெயரளவு க/கு
7. கடனாளியிடமிருந்து திரும்பப் பெற முடியாத தொகையினை ______ கணக்கில் பற்று வைக்க வேண்டும்.
   a) கடனாளி b) வாராகடன் c) ரொக்க
8. பேரேடு ஒரு
   a) தோற்றப் பதிவு ஏடு b) இறுதிப்பதிவு ஏடு c) ரொக்க நடவடிக்கைகள் ஏடு
9. ஆள்சார் கணக்குகள் மற்றும் சொத்துக் கணக்குகளின் இருப்புகள் காட்டப்படுவது
   a) வியாபார க/கு b) இலாபநட்ட க/கு c) இருப்புநிலைக்குறிப்பு
10. மாற்றுச்சீட்டினை தயார் செய்பவர் ______ எனப்படுகிறார்.
    a) எழுதுநர் b) எழுதப் பெறுநர் c) செலுத்தப் பெறுநர்
11. நாம் வழங்கிய காசோலை அவமதிக்கப்பட்டால், வரவு செய்யப்படும் கணக்கு
    a) சரக்கீந்தோர் க/கு b) வாடிக்கையாளர் க/கு c) வங்கி க/கு
12. முன்னர் பெற்ற காசோலை மற்றொரு நாளில் வங்கியில் செலுத்தினால் பதிவு செய்யப்பட வேண்டிய பத்தி ______.
    a) ரொக்க b) வங்கி c) ரொக்கம், வங்கி
13. சில்லறை ரொக்க ஏடு காட்டும் இருப்பு
    a) ஒரு பொறுப்பு b) ஒரு சொத்து c) ஒரு வருமானம்
14. மே 1, 2017 அன்று சில்லறைக் காசாளரிடம் ரூ.1,500 தரப்பட்டது. அம்மாதம் அவர் ரூ.1,200 செலவழித்தார். ஜூன் 1, 2017 அன்று அவர் கையில் உள்ள இருப்புத் தொகை யாது?
    a) ரூ.1,200 b) ரூ.300 c) ரூ.2,700
15. வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயாரிப்பவர்
    a) வங்கியின் வாடிக்கையாளர் b) வங்கி c) வணிகத்தின் கடனீந்தோர்
16. ரொக்க ஏட்டின்படி இருப்பு ஆரம்ப நிலையாக இருக்கும்பொழுது, வங்கி தவறுதலாக செய்த வரவு
    a) கழிக்கப்பட வேண்டும் b) கூட்டப்பட வேண்டும் c) இரண்டும் இல்லை
17. அநாமத்து கணக்கின் வரவு இருப்பு தோன்றுவது
    a) இலாப நட்டக் கணக்கின் வரவு பக்கம்
    b) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துக்கள் பக்கம் c) இருப்புநிலைக்குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
18. அலுவலகத் தட்டச்சுப் பொறியைச் சீர் செய்யச் செலவிட்ட தொகை பற்று வைக்க வேண்டியது
    a) பழுதுபார்ப்புக் க/கு b) தட்டச்சுப்பொறி க/கு c) சில்லறைச் செலவு க/கு
19. ஓராண்டிற்கு மேல் தொழிலுக்கு பயனளிக்கும் நடவடிக்கை
    a) வருவாயினம் b) முதலினம் c) இரண்டும் இல்லை
20. ரூ.3,00,000 மதிப்புள்ள ஒரு சொத்து ரூ.3,60,000 க்கு விற்கப்பட்டால் முதலின இலாபம் ______.
    a) 3,60,000 b) 60,000 c) 3,00,000

### பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: (வினா எண்.21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** 7 x 2 = 14

21. அடிக்கடி நிகழாப் பதிவுகள் எந்த ஏட்டில் பதிவு செய்யப்படும்? அந்த ஏட்டை விவரி.
22. கணக்கியல் சுழல் படத்தை வரைக.
23. திருத்தி அமைக்கப்பட்ட கொள்கைகள் யாவை?
24. பின்வரும் இனங்களை தனிநபர்கள், சட்டமுறை அமைப்புகள், பிரதிநிதித்துவ நபர்கள் என வகைப்படுத்துக.
    i) இந்தியன் வங்கி ii) முருகன் iii) கொடுபட வேண்டிய வாடகை iv) இந்தியன் ஆயில் கார்ப்பரேசன்
25. கணக்கியல் சமன்பாட்டின்படி விடுபட்ட தொகையினைக் குறிப்பிடுக.

| | *சொத்துகள்* | = | *பொறுப்புகள்* | + | *முதல்* |
|---|---|---|---|---|---|
| i) | 1,00,000 | = | ? | + | 15,000 |
| ii) | ? | = | 50,000 | + | 90,000 |

26. கீழ்க்காணும் கணக்குகளில் தோன்றும் இருப்புகளைக் குறிப்பிடுக.
i) முதல் ii) கடனாளி iii) கழிவு பெற்றது iv) விற்பனை

27. திரு.வேல் அவர்களின் தனிப்பத்தி ரொக்க ஏட்டினை தயார் செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2016 ஏப்ரல் | 1 | கையிருப்பு ரொக்கம் | 56,000 |
| | 5 | வாடகை செலுத்தியது | 1,500 |
| | 9 | ரொக்க விற்பனை | 3,000 |
| | 12 | சிவாவிடம் சரக்கு வாங்கியது | 5,000 |

28. கீழ்க்காணும் செலவுகள் முதலினத்தைச் சார்ந்ததா, வருவாயினத்தைச் சார்ந்ததா என வகைப்படுத்துக.
i) பழைய இயந்திரத்தை வாங்கியவுடன் பழுது பார்த்தது.
ii) கட்டிடப் பராமரிப்புச் செலவு.
iii) காப்புரிமை பெற செலவு செய்தது.
iv) மாத இதழுக்கு சந்தா வழங்கியது.

29. வங்கி சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன?

30. முன் பண மீட்பு முறையை விவரி.

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: (வினா எண்.31க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** 7 x 3 = 21

31. செலுத்தற்குரிய நாளை கணக்கிடுக.

| | மாற்றுசீட்டின் தேதி | தவணைக்காலம் |
|---|---|---|
| i) | ஜனவரி 1 | 3 மாதங்கள் |
| ii) | ஜூலை 12 | 1 மாதம் |
| iii) | செப்டம்பர் 22 | 3 மாதங்கள் |

32. குறிப்பேட்டில் கீழ்க்கண்ட தொடக்க பதிவினை பதிவு செய்க.

| | ரூ. |
|---|---|
| ரொக்கம் | 30,000 |
| இயந்திரம் | 3,70,000 |
| கடனீந்தோர் | 85,000 |
| கடனாளிகள் | 1,90,000 |
| சரக்கிருப்பு | 30,000 |

33. கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளுக்குரிய நடவடிக்கைகளைத் தருக.

| | | | | |
|---|---|---|---|---|
| i) | ரொக்க க/கு | ப | XX | |
| | அறைகலன் க/கு | | | XX |
| ii) | எடுப்பு க/கு | ப | XX | |
| | கொள்முதல் க/கு | | | XX |
| iii) | வங்கி க/கு | ப | XX | |
| | சந்தோஷ் க/கு | | | XX |

34. கீழ்க்காணும் நடவடிக்கைகளை உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2012 ஜனவரி | 1 | சுந்தருக்கு சரக்கு விற்றது | 10,000 |
| | 5 | விக்னேஷ்க்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 3,000 |
| | 6 | சங்கருக்கு சரக்கு விற்றது | 15,000 |
| | 17 | அறைகலன் விற்றது | 5,000 |
| | 19 | குமாருக்கு சரக்கு விற்றது | 7,000 |

35. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து திரு.பாலன் அவர்களின் வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயாரிக்க.

| | | ரூ. |
|---|---|---|
| i) | ரொக்க ஏட்டின்படி இருப்பு | 15,000 |
| ii) | வங்கி அளித்த வட்டி | 500 |
| iii) | வங்கியில் செலுத்தியும் வசூலாகாதது | 1,000 |
| iv) | அளித்த காசோலைகளில் இதுவரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதவை | 2,000 |

36. கீழ்க்காணும் நடவடிக்கைகளை திரு.ராஜ் அவர்களின் இருபத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2017 மார்ச் | 1 | கையிருப்பு ரொக்கம் | 50,000 |
| | 3 | கொள்முதல் செய்தது | 10,000 |
| | 5 | முரளியிடமிருந்து பெற்றது | 3,450 |
| | | தள்ளுபடி அளித்தது | 50 |
| | 6 | சுப்ரமணியிடம் சரக்கு வாங்கியது | 10,000 |
| | 12 | மின்கட்டணம் செலுத்தியது | 1,000 |
| | 15 | சுப்ரமணிக்கு 1% ரொக்கத் தள்ளுபடி கழித்து மீதி தொகையை செலுத்தியது | |

37. கீழ்க்காணும் பிழைகளைத் திருத்துக : i) கொள்முதல் ரூ.1,700 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது ii) விற்பனை ஏடு ரூ.2,800 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது. iii) விற்பனை திருப்ப ஏடு ரூ.1,200 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது. iv) கொள்முதல் திருப்ப ஏடு ரூ.800 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. v) இயந்திரம் நிறுவுவதற்கு கூலி கொடுத்தது ரூ.10,000 கூலி கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
38. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக. (ஏதேனும் 3)
39. கணக்கியலின் பொன்னான விதிகளைக் கூறுக.
40. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? ஏதேனும் ஒரு உதாரணம் தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 7 x 5 = 35

41. திரு.தங்கப்பன் அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளைக் கொண்டு 31.3.2010 ஆம் நாளைய இருப்பாய்வைத் தயாரிக்க.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| நிலம், கட்டிடம் | 2,20,000 | காப்பு நிதி | 10,000 |
| கடனீந்தோர் | 30,000 | விற்பனை | 1,20,000 |
| முதல் | 2,00,000 | வாராக்கடன் | 10,000 |
| கொள்முதல் | 1,30,000 | ஈட்டிய கழிவு | 5,000 |
| காப்பீடு | 20,000 | வங்கி மேல்வரைப்பற்று | 15,000 |

(அல்லது)

கீழ்க்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டினை தயாரிக்க.

| | | ரூ. |
|---|---|---|
| i) | விஜயா தொழில் தொடங்கியது | 2,50,000 |
| ii) | விக்னேஷிடம் சரக்கு வாங்கியது | 1,00,000 |
| iii) | வாடகை செலுத்தியது | 10,000 |
| iv) | ரூ.30,000 அடக்கவிலையுள்ள சரக்கை ராமுவிற்கு விற்றது | 50,000 |

42. பின்வரும் விவரங்களிலிருந்து திரு.ஈஸ்வரன் அவர்களின் 31.3.2002ம் நாளைய வங்கி சரிகட்டும் பட்டியலைத் தயாரிக்கவும்.

| | | ரூ. |
|---|---|---|
| i) | செல்லேட்டின்படி வங்கியிருப்பு | 11,530 |
| ii) | வங்கியில் செலுத்திய காசோலைகள் 31.3.2002 ல் தீர்வு செய்யப்படாதது | 2,150 |
| iii) | வங்கி வசூல் செய்த முதலீடு மீதான வட்டி குறித்து ரொக்க ஏட்டில் பதிவில்லை | 275 |
| iv) | உள்ளூர் காசோலை நேரடியாக வங்கியில் செலுத்தியது குறித்து ஏட்டில் பதிவில்லை | 250 |
| v) | செல்லேட்டின்படி வங்கிக் கட்டணம் | 95 |
| vi) | விடுத்த காசோலைகள் பணமாக்கப்படாதவை | 1750 |

(அல்லது)

கீழ்க்கண்ட நடவடிக்கைகளை திரு.ஆறுமுகம் அவர்களின் பேரேட்டில் நேரடியாகப் பதிவு செய்து, இருப்புகளைக் காண்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2000 அக். | 1 | செந்திலிடம் பெற்றது | 1,50,000 |
| | 5 | சரக்கு வாங்கியது | 60,000 |
| | 15 | வாடகை செலுத்தியது | 5,000 |
| | 21 | வங்கியில் செலுத்தியது | 20,000 |
| | 25 | காசோலை கொடுத்து சரக்கு வாங்கியது | 15,000 |

43. திரு.நந்தி அவர்களின் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டில் கீழ்க்காணும் நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2012 ஆகஸ்ட் | 1 | கையிருப்பு ரொக்கம் | 410 |
| | 1 | தலைமைக்காசாளரிடமிருந்து பெற்றது | 1,090 |
| | 3 | மின்கட்டணம் செலுத்தியது | 335 |
| | 5 | எழுதுபொருள் வாங்கியது | 128 |
| | 7 | மணிக்கு செலுத்தியது | 150 |
| | 12 | மதுரைக்கு அனுப்பிய தந்தி | 65 |
| | 19 | அறைகலனைப் பழுது பார்த்தது | 125 |
| | 24 | ஏற்றிச் செல் செலவு | 50 |
| | 27 | வாடகைச் சீருந்து கட்டணம் | 250 |

(அல்லது)

திரு.குருசாமியின் ஏடுகளில் கீழ்க்காணும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளைத் திருத்த தேவையான பதிவுகளைத் தருக.

i) முரளிக்கு செலுத்திய ஊதியம் ரூ.10,000, முரளி கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
ii) தட்டச்சுப் பொறிக்கு செலுத்திய ரூ.5,000, அலுவலக செலவுகள் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
iii) அறைகலன் வாங்கியது ரூ.6,000, கொள்முதல் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
iv) பழுதுபார்ப்பு செலவு ரூ.1,000, கட்டடக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
v) உரிமையாளர் தனது சொந்தப் பயனுக்கு எடுத்துக் கொண்ட ரூ.8,000, வியாபாரச் செலவு கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

44. கீழ்க்காணும் நடவடிக்கைகளைக் கொண்டு முப்பத்தி ரொக்க ஏடு தயார் செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2013 ஜனவரி | 1 | ரொக்க இருப்பு | 6,000 |
| | 1 | வங்கி இருப்பு | 4,000 |
| | 3 | வங்கியிலிருந்து எடுத்தது | 2,000 |
| | 10 | லெட்சுமி நமது வங்கிக் கணக்கில் நேரடியாக கட்டியது | 3,000 |
| | 17 | மகாவிடம் பெறப்பட்ட காசோலை வங்கிக்கு அனுப்பப்பட்டது | 5,000 |
| | 22 | இராமிடம் சரக்கு விற்று பெற்ற காசோலை | 8,000 |
| | 27 | வேலுக்கு காசோலை வழங்கியது | 13,900 |
| | | தள்ளுபடி பெற்றது | 100 |
| | 29 | இராமின் காசோலை வசூலுக்காக வங்கிக்கு அனுப்பப்பட்டது | (அல்லது) |

பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2006 ஜுன் | 1 | கீதா போட்ட முதல் | 1,50,000 |
| | | சீதா போட்ட முதல் | 1,00,000 |
| | 12 | தேவி என்பவருக்கு ரூ.29,750 செலுத்தி தீர்த்துக் கொள்ளப்பட்ட க/கு | 30,000 |
| | 21 | இளவரசியிடம் காசோலை பெற்றது | 30,000 |

45. பின்வரும் விவரங்களைக் கொண்டு திருமதி.புஷ்பவள்ளியின் கொள்முதல் ஏட்டை தயார் செய்க.

2012 நவம்பர் 5 அரவிந்த் & கோவிடம் சரக்கு வாங்கியது
20 மேஜைகள் ஒன்று ரூ.600 வீதம், 20 நாற்காலிகள் ஒன்று ரூ.300 வீதம்
10 ஆனந்த் & கோவிடம் ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது
10 மேஜைகள் ஒன்று ரூ.300 வீதம், 20 நாற்காலிகள் ஒன்று ரூ.150 வீதம்
15 பாஸ்கர் & கோவிடம் சரக்கு வாங்கியது
10 அலமாரிகள் ஒன்று ரூ.3000 வீதம், 10 மேஜைகள் ஒன்று ரூ.200 வீதம்
22 பழைய தட்டச்சு எந்திரத்தை கடனுக்கு மதனிடமிருந்து வாங்கியது ரூ.1,000
28 கோபிநாத்திடம் சரக்கு வாங்கியது
10 மேஜைகள் ஒன்று ரூ.1000 வீதம், 2 சுழலும் நாற்காலிகள் ஒன்று ரூ.1200 வீதம்

(அல்லது)

பின்வரும் விவரங்களைக் கொண்டு பிரசன்னாவின் இருபத்தி ரொக்க ஏட்டை தயார் செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2008 டிசம்பர் | 1 | கையிருப்பு ரொக்கம் | 22,000 |
| | | வங்கி மேல்வரைப்பற்று | 5,000 |
| | 4 | தீனாவிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| | 9 | வங்கியில் செலுத்தியது | 10,000 |
| | 14 | இயந்திரம் விற்று பெற்றது ரூ.10,000, அதில் வங்கியில் செலுத்தியது ரூ.2,000 | |
| | 20 | வங்கிக் கட்டணம் ரூ.1,300 | |
| | 24 | பசுபதியிடம் பெற்ற காசோலை ரூ.1,000 வங்கியில் செலுத்தப்பட்டது. | |
| | 27 | தீனாவிற்கு அளித்த காசோலை ரூ.15,000 | |
| | 29 | நாம் தீனாவிற்கு வழங்கிய காசோலை அவமதிக்கப்பட்டது. | |

46. திருமதி.பாவை அவர்களின் ஏடுகளில் கீழ்க்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 2011 பிப்ரவரி | 1 | வியாபாரம் தொடங்கியது | 3,00,000 |
| | 3 | சரக்கு வாங்கியது | 50,000 |
| | 7 | அலுவலகத் தேவைக்காக வங்கியிலிருந்து எடுத்தது | 10,000 |
| | 10 | சுரேஷிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,000 |
| | 15 | ஜெகதீசனிடமிருந்து அறைகலன் வாங்கியது | 12,000 (அல்லது) |

திரு.சுப்புராஜ் என்பவர் 2007ஆம் ஆண்டு தன் தொழிலில் செலவிடப்பட்ட செலவுகளைத் தருகிறார். அவை எவ்வகை செலவினத்தை சார்ந்தது எனக்குறிப்பிடுக.

i) அரசாணையின்படி மழை நீர் சேகரிப்பு அமைப்பு செய்ய செலவு ரூ.15,000
ii) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காக செலவு செய்தது ரூ.3,00,000
iii) பணியாளருக்கு ஊதியம் வழங்கியது ரூ.10,000
iv) பெட்ரோல் என்ஜினுக்குப் பதில் டீசல் எஞ்சின் மாற்ற செலவு செய்தது ரூ.6,000
v) மேலாளரின் ஆண்டு ஊதியம் ரூ.1,20,000

47. வியாபாரத் தள்ளுபடிக்கும், ரொக்கத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் 5 தருக.

(அல்லது)

ரொக்க ஏட்டிற்கும், செல்லேட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் 5 தருக.

******